# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ).,**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 318/ந/2025, நாள் 10.03.2026

ஜெ. சண்முக சுந்தரம்,
பவானி, ஈரோடு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

1) நகராட்சி ஆணையர்,
பவானி நகராட்சி, ஈரோடு மாவட்டம். –
2) காஞ்சனா, பவானி ,
ஈரோடு மாவட்டம்.
} எதிர்மனுதாரர்கள்

ஈரோடு மாவட்டம், பவானி, புதிய வார்டு 19, காவேரி வீதி, கதவு எண்.236 என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜெ. சண்முக சுந்தரம் என்பவரின் 09.01.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 10.01.2025 அன்று பெறப்பட்டு, 318/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

ஈரோடு மாவட்டம், பவானி, புதிய வார்டு 19, காவேரி வீதி, கதவு எண்.236 என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜெ. சண்முக சுந்தரம் என்பவரின் 09.01.2025 நாளிட்ட முறையீட்டு மனுவுடன் பெறப்பட்டுள்ள 29.11.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“பவானி நகராட்சிக்கு உட்பட்ட எல்லையில் (பழைய வார்டு – 22, அதற்கு முன் வார்டு 11, தற்போது புதிய வார்டு – 19 PROPERTY TAX OLD ASSESSMENT NO. 13332 பவானி நகராட்சி ஆவணங்களின்படி) (OLD SF NO. 847/4 BHAVANI TOWN TSLR – NO.29, WARD – C BLOCK – 16 ஈரோடு மாவட்டம், பவானி தாலுக்கா வருவாய்த் துறை ஆவணங்களின்படி) (1993–ம் ஆண்டு முதல் பவானி நகராட்சி ஆவணங்களின்படி கதவு எண். 236) மேற்படி விலாசத்தில் உள்ள (நான் பிறந்த) எனது சொந்த வீடு 60 வருடங்களுக்கு மேல் உள்ள பழைய மதராஸ் தார்சு வகை குடியிருப்பு மற்றும் கை ஓடு போட்ட குடிசை தொழிற்கூட (DILAPIDATED / பாழடைந்த) கட்டிடமாகும்.

1) பவானி நகராட்சி ஆணையர் அவர்களுக்கு பதிவு செய்யப்பட்ட கடிதம் மூலமாக (18.03.2023 அன்றே) (vide RT 447184020 IN DT. 18.03.2023 WITH A/C DUE (REQUEST SENT UNDER TAMIL NADU COMBINED DEVELOPMENT & BUILDING RULES ACT, 2019-PART VII-BUILDING RULES (9) MAINTENANCE OF BUILDINGS விதியின்படி) கட்டிடத்தின் வயது 50 வருடங்கள் பூர்த்தியானவுடன் கட்டிட உரிமையாளர் (ஆகிய நான்) சமர்ப்பிக்க வேண்டிய மனுவை (கட்டிடத்தின் உறுதி தன்மையை சோதிக்கவும் அளித்த எனது மனு) எனது பாழடைந்த கட்டிடத்தை பவானி நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் அவர்கள் 11.06.2024 அன்று ஆய்வு செய்தபின், அவரது 12.06.2024 தேதிய குறிப்பு பெயரில் பவானி நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவிப்பு கடிதம் ந.க.எண். 887/2024/F1, தேதி 12.06.2024 மூலமாகவும், பவானி நகராட்சி ஆணையரின் அறிவிப்பு கடிதம் 887/2024/F1, தேதி 03.07.2024, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் அமைப்பு சட்டம், 1998, பிரிவு 136-ன் கீழ் மூலமாகவும் 15 நாட்கள் கெடு கொடுத்தது எனது வீட்டினை முழுமையாக அகற்றவும் (மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் / DANGEROUS CONDITION என தெரிவித்து) எனக்கு 05.07.2024 அன்று அறிவிப்பு கடிதம் கிடைக்க பெற்றேன்.

2) 2016 ஆண்டு அறுவை சிகிச்சை செய்த எனது வலது கால் வலி காரணமாகவும், வேறு சில சூழ்நிலைகள் காரணமாகவும் 15 நாட்களுக்குள் என்னால் அந்த பணி செய்ய முடியவில்லை. ஆகையால் தாங்கள் தயவு கூர்ந்து எனக்கு மேலும் 30 நாட்களுக்கு வீட்டினை முழுமையாக அகற்ற அனுமதி அளித்து மீண்டும் அனுமதி கடிதம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என எனது பதிவு கடிதம் மூலமாக எனது மனுவை VIDE RT506599847IN தேதி 29.07.2024 மூலமாக சமர்ப்பித்தேன்.

3) மேலும் ஒரு மாதத்திற்குள் எனது மனு மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான கடிதமோ (அ) தகவலோ கிடைக்க பெறாததாலும், மேலும் எனது மனு மீது நடவடிக்கை எடுக்க மேலும் கால அவகாசம் வேண்டி எந்த ஒரு கடிதமோ அல்லது தகவலோ கிடைக்க பெறாததால், ஈரோடு மாவட்ட ஆட்சியரின் குறைதீர் மனு எண். 10018897/29.08.2024 ஆன்லைன் மூலமாக விண்ணப்பம் செய்தேன்.

4) அதனையும் திருப்பூர் மண்டல இயக்குனர் அவர்களிடம் மேல்முறையிட்டு செய்ததன் மூலம் ஏற்றுக் கொண்ட பவானி நகராட்சி ஆணையாளர் அவர்கள், இன்றுவரை அதற்கான கடிதமோ அல்லது ஆணையோ (பல முறை தொலைபேசி மூலமாகவும் & பல முறை நேரிலும் முயற்சித்தும்) எனக்கு கிடைக்க பெறவில்லை. மேலும், எனது கட்டிடம் அனுமதி 960 சதுர அடி எனவும், கட்டிடம் முழுவதும் RCC எனவும், அதன் கட்டிட வயது 15 ஆண்டுகள் எனவும் (பவானி நகராட்சி ஆவணங்களின்படி) உள்ளது. அதனை மறைத்து பல ஆண்டுகளாக எனது சொத்திற்கு அதிக வரி வசூல் செய்து வந்துள்ளார்கள். ஆகையால் எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு தாங்கள் நீதி வழங்க வேண்டும். ஆதலால் மேலும் 30 நாட்களுக்கு வீட்டினை முழுமையாக அகற்ற அனுமதி (ரேஷன் கடை அருகிலிருப்பதால்) அளித்து மீண்டும் அனுமதி கடிதம் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் விண்ணபத்தின் மீது நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் பொது மக்களுக்கோ அல்லது அருகில் உள்ள தனி நபருக்கோ உயிருக்கு ஏதாவது சேதமோ, ஆபத்தோ அல்லது விபத்தோ ஏற்பட்டால் நான் பொறுப்பல்ல என்பதனையும் மீண்டும் தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பவானி நகராட்சி ஆணையாளர் அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் அமைப்பு சட்டம், 1998, பிரிவு 136-ன் கீழ் எடுக்க வேண்டிய தொடர் நடவடிக்கைகளை நிறுத்தியும், மீண்டும் (30 நாட்களுக்கு) காலம் அவகாசம் நீடித்து உத்திரவினை அளிக்குமாறு கேட்டுகொள்கிறேன். ஒரு அரசு அதிகாரி தனது கடமைகளை சட்டப்படியாகவும், சட்ட விதிகளுக்கு உட்பட்டு பிறரின் தீய செயல்களுக்கு துணை செல்லாமலும், நீதி & நேர்மை தவறாமல் இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இல்லாமல் பவானி நகாட்சி ஆணையாளர் அவர்கள் இன்றுவரை அதற்கான கடிதமோ அல்லது ஆணையோ எனக்கு அளிக்காமலும், மேலும் எனது சொத்து வரி விதிப்பு குளறுபடி தொடர்ந்து மூடி மறைக்க முயற்சி செய்கிறாரோ என எண்ண தோன்றுகிறது.

ஆகையால் (ரேஷன்கடை அருகிலிருப்பதால்) சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படாத வண்ணம் விரைவாக தாங்கள் எனக்கு மீண்டும் அனுமதி அளித்து பவானி நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு உத்திரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், எனது கட்டிடம் முழுவதும் அகற்றிய பின்னரே மேற்படி பவானி நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவிப்பு கடிதம் ந.க.எண்.887/2024/F1, தேதி 03.07.2024 கோப்பினை நிறைவு (CLOSE) செய்யவேண்டும் என தாங்கள் பவானி நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். நான் எனது சொத்தின் வரி விதிப்பு முறைப்படுத்த FORM-I முறையாகவும், விதிகளுக்கு உட்பட்டு சமர்ப்பித்து பிறகு, பவானி நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் அவர்கள் 11.06.2024 அன்று ஆய்வு செய்தபின் மேற்படி அறிவிப்பு கடிதம் கிடைக்க பெற்றேன் என்பதனையும் தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நான்தான் இன்றுவரை மேற்படி வீட்டு வரி மற்றும் தண்ணீர் வரி ஆகியவை பாக்கியின்றி செலுத்தி வருகிறேன். ஆகையால் எனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு தாங்கள் நீதி வழங்க வேண்டும் என தாழ் பணிந்து மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்."

2. மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.06.2025 நாளிட்ட கடிதத்தின் மூலம் பவானி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. பவானி நகராட்சி ஆணையரின் அறிக்கை கடிதம் ந.க.எண்.887/2022/எப்1, நாள் 27.06.2025–ல் மனுதாரரின் புகார்களுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதில் –

“திரு. J. சண்முக சுந்தரம் என்பவரால் விண்ணப்பிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் மக்கள் குறைதீர்க்கும் மனு நாள் 30.05.2024–இல் மனுதாரர் திரு. J. சண்முக சுந்தரம் என்பவர் தனக்கு சொந்தமான சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டிய வீட்டினை பலமிழந்து விழும் நிலையில் உள்ளதால் அருகில் உள்ள வீடுகளுக்கோ, மக்களுக்கோ ஆபத்து நேரும் முன் இடித்து அப்புறப்படுத்திக்கொள்ள உரிய உத்திரவு வழங்க கோரி விண்ணப்பித்து உள்ளார்.

அதன்படி இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வர் நேரில் ஆய்வு செய்து, பவானி நகராட்சி அலுவலகத்தின் அறிவிப்பு கடிதம் ந.க.எண்.887/2022/எப்1, நாள் 03.07.2024 மூலம் மேற்படி குடியிருப்பு கட்டிடத்தினை அகற்றிக் கொள்ள அறிவிப்பு வழங்கப்பட்டது. ஆனால் மனுதாரர் தனது உடல் நலம் மற்றும் குடும்ப பிரச்சனை தொடர்பாக மேற்படி கட்டிடத்தினை அகற்றுவதற்கு கால அவகாசம் கோரினார்.

இந்நிலையில், மீண்டும் மேற்படி வீட்டினை ஆய்வு செய்ததில் திருமதி காஞ்சனா, க/பெ. ஜெயபாலன் (லேட்) என்பவர் அந்த வீட்டில் தனியே வசித்து வருகிறார். மேலும், இக்குடியிருப்பு தொடர்பாக குடும்ப நபர்களால் வழக்கு போடப்பட்டு தீர்ப்பு பெறப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

திருமதி காஞ்சனா, க/பெ ஜெயபாலன், 236, காவேரி வீதி, பவானி என்பவரது கடிதம் நாள் 23.06.2025–இல் காணும் கடிதத்தில் திருமதி காஞ்சனா என்பவர் தனது கணவர் பெயர் ஜெயபாலன், த/பெ. தியாகராஜன் அவர்களது வாரிசுச் சான்றுபடி (இரண்டாவது மனைவி) உள்ளது, எனவும் மேலும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பவானியில் இது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டு (OS No. 90/2012)–ன் படி, அந்த வீட்டில், தான் வசித்து வருவதாகவும், வீட்டை நல்ல முறையில் பராமரித்து உள்ளதால் இடிக்க கூடாது எனவும் தெரிவித்தும், வழக்கு நடைபெற்று தனக்கு சாதகமாக தீர்ப்பு பெறப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டு உரிய ஆவணங்களுடன் கடிதம் அளித்துள்ளார்.

எனவே, திரு. J. சண்முக சுந்தரம் ஆகிய தங்களது மனு தொடர்பான கட்டிடத்தினை இடிப்பது தொடர்பாக தங்களது குடும்ப பிரச்சனைகளை முடித்த பின்னரே மேல் நடவடிக்கை எடுக்க இயலும் என்ற விபரத்தினை மனுதாரருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.887/2022/எப்1, நாள் 27.06.2025 மூலம் தெரிவிக்கப்பட்டது என்ற விபரங்களை இதன் வாயிலாக பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.”. என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர் மற்றும் முதல் எதிர்மனுதாரரான பவானி நகராட்சி ஆணையர் ஆகியோரை 25.09.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 18.09.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 25.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

6. முதல் எதிர்மனுதாரரான பவானி நகராட்சி ஆணையரின் 22.09.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண். 887/2024/எப்1–ல் ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற மதிப்பீட்டுக்குழு ஆய்வு மேற்கொள்ள உள்ளதால் 25.09.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திரு.R.அன்பழகன் என்பவர் நேரில் ஆஜராவார் என தெரிவித்ததன்பேரில், 25.09.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் திரு.R.அன்பழகன் என்பவர் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்கு மூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“மனுதாரர் திரு. J. சண்முக சுந்தரம் என்பவர் தனக்கு சொந்தமான வீடு சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டியதால் பலமிழந்து விழும் நிலையில் உள்ளதால் அருகில் உள்ள வீடுகளுக்கோ, மக்களுக்கோ ஆபத்து நேரும் முன் இடித்து அப்புறப்படுத்திக்கொள்ள உரிய உத்திரவு வழங்ககோரி விண்ணப்பித்திருந்தனர். நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் நேரில் ஆய்வு செய்து இவ்வலுவலக அறிவிப்பு மூலம் மேற்படி குடியிருப்பு கட்டிடத்தினை அகற்றிக்கொள்ள அறிவிப்பு வழங்கப்பட்டது. மனுதாரர் தனது உடல்நலம் மற்றும் குடும்ப பிரச்சினை தொடர்பாக மேற்படி கட்டிடத்தினை அகற்றுவதற்கு கால அவகாசம் கோரியிருந்தார்.

இதனிடையில் திருமதி. காஞ்சனா என்பவர் தனது கணவர் ஜெயபாலன் த/பெ.தியாகராஜன் என்பவரின் வாரிசுச் சான்றுபடி தான் இரண்டாவது மனைவி எனவும், மேற்படி வீட்டில், தான் வசிக்க மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பவானியில் வழக்கு தொடரப்பட்டு (O.S.No.90/2012–ன்படி) 17.04.2014 நாளிட்ட

தீர்ப்பில் இந்த சொத்து மனுதாரரின் பூர்வீக சொத்து ஆகும் எனவும், இவ்வழக்கானது வாதி தாவா சொத்தின் சுவாதீன அனுபவத்தில் இருப்பதை பிரதிவாதியோ அவரது ஆட்களோ எவ்வகையிலும் சட்டப்படி அல்லாமல் வாதியை வெளியேற்றக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பித்து உத்தரவிடப்படுகிறது என உத்தரவாகியுள்ளது.

மேலும் திருமதி. காஞ்சனா என்பவரை மனுதாரரின் (தந்தையாரின் இரண்டாவது மனைவி) வீட்டை காலி செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறார். மேலும் மனுதாரர் கூறியுள்ளபடி உடனடியாக இடிந்து விழும் நிலையில் கட்டிடம் இல்லை என்பதனையும் இம்முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கட்டிடத்தினை அங்கீகரிக்கப்பட்ட Structural Engineer–ன் சான்றினை பெற்று மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.". என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் 23.09.2025 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் 08.09.2025 அன்று தனது வலது கால் விரல் அறுவை சிகிச்சை செய்து, தொடர் சிகிச்சையில் உள்ளதால் 25.09.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் கலந்து கொள்ள இயலாத நிலை உள்ளதால், மேற்படி விசாரணைக்கு ஒரு மாதம் கால அவகாசம் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

8. மனுதாரரின் 23.09.2025 நாளிட்ட கோரிக்கையினை ஏற்று மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும் விதமாக புகாருக்குள்ளான வீட்டில் வசித்து வரும் திருமதி. காஞ்சனா என்பவரை இரண்டாவது எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டு, மனுதாரர், எதிர்மனுதாரர் மற்றும் இரண்டாவது எதிர்மனுதாரர் ஆகியோரை 03.12.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.11.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

9. மனுதாரர் 03.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை.

10. முதல் எதிர்மனுதாரரான பவானி நகராட்சி ஆணையரின் சார்பில் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் 03.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"பவானி, காவேரி தெருவைச் சார்ந்த திருமதி. காஞ்சனா என்பவர் திரு. ஜெயபாலன் த/பெ. தியாகராஜன் என்பவரின் வாரிசுச் சான்றுபடி இரண்டாவது மனைவி எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது எனவும், மேற்படி நபர் பவானி, காவேரி தெரு, கதவு எண்.236–ல் வசித்து வருவதாகவும், தன்னை மேற்படி வீட்டில் இருந்து வெளியேற்றக்கூடாது என மாண்பமை பவானி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு (O.S.No.90/2012-ன்படி) தனக்கு சாதகமாக தீர்ப்பு பெறப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டு உரிய ஆவணங்களுடன் கடிதம் அளித்துள்ளார். மேற்படி வீட்டினை ஆய்வு செய்கையில் வீட்டின் கட்டுமானத்தின் ஒரு பகுதி பழுதடைந்துள்ளது. பழுதடைந்த பகுதியை அகற்றுமாறு பவானி நகராட்சியால் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது திருமதி. காஞ்சனா என்பவர் குடியிருக்கும் பகுதி நல்ல நிலையில் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். எனினும் மேற்படி கட்டிடத்திற்கு ஸ்திரத்தன்மைக்கான அங்கீகரிக்கப்பட்ட Structural Engineering சான்றிதழினை இன்னும் 15 நாட்களுக்குள் பெற்று இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் திருமதி. காஞ்சனா என்பவரால் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதால் நகராட்சியினால் தலையிட இயலவில்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''.

11. இரண்டாவது எதிர்மனுதாரர் மற்றும் அவரது வழக்கறிஞர் S.M.ராதிகா ஆகியோர் 03.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

"மனுதாரரின் தந்தையான திரு.ஜெயபாலன் என்பவரின் இரண்டாவது மனைவியான காஞ்சனா ஆகிய நான் மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள வீட்டில் கடந்த 25 ஆண்டுகாலமாக வசித்து வருகிறேன். எனது கணவர் இறந்த பின்னரும் நான் அந்த வீட்டில்தான் வசித்து வருகின்றேன். மேற்படி வீட்டின் கட்டுமானம் நல்ல நிலையில் உள்ளதால் நான் வசித்து வரும் வீட்டினை மனுதாரரின் கோரிக்கையின்படி இடிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

12. மனுதாரரின் 03.12.2025 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் மருத்துவ சிகிச்சை தொடர்வதாலும், இயற்கை சூழல் காரணமாகவும் 25.09.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணையில் ஆஜராக இயலவில்லை என தெரிவித்து மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கும் பொருட்டு கால அவகாசம் கோரியுள்ளார்.

13. மனுதாரரின் கோரிக்கையினை ஏற்று, மனுதாரருக்கு இறுதி வாய்ப்பு அளித்து 20.01.2026 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு இரண்டாவது எதிர்மனுதாரரான திருமதி. காஞ்சனா என்பவருக்கு நகலிட்டு, மனுதாரருக்கும், முதலாவது எதிர்மனுதாரரான பவானி நகராட்சி ஆணையருக்கும் 17.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

14. மனுதாரரின் 19.01.2026 நாளிட்ட எழுத்துபூர்வ அறிக்கையை 20.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையின் போது சமர்ப்பித்துள்ளார். அதில் –

" I, J. Shanmuga Sundaram, S/o. Late K.T. Jayabalan peace loving and law abiding citizen (aged 50 years) residing from day one of my birth at Door No. 236, Cauvery Street, New Ward No. 19, Bhavani – 638301, Erode Dt. now, before as D.No.6/27, Car Street in Ward 6 from 1944 in SRO, Bhavani book of record, my typed written argument for my appearance in person on 20.01.2026.

1. My property as above ~ 120 yrs. old Madras Terrace with Tiled building even in record book of SRO, Bhavani in 1944 with D.No. 6/27 & Its true age can be defined by cutted old Neem Tree roots as above to East of Ground Well Planted by my Great Grand Father's Father of Late Kandasamy Chettiar and my petition was against Bhavani Municipality Commissioner's Demolition Notice Na.Ka 881/2024/F1, dt. 03.07.2024 for (from 1993 to now) D.No. 236, Cauvery Street, Bhavani-638301, now new ward: 19 issued under Sec. 136 of Tamilnadu Urban Local Bodies Act, 1996 under Sec. 136 (Power to order removal of dangerous buildings) 1. Where it appears to the Commissioner at any time that any building is in a ruinous condition or is in any way dangerous or unfit for human habitation issued against TS No. 29. Ward: C Block 16 (Old Sur. No.847/4 part) (Classified as sarkar poromboke in 2011 & as Ryotwari Plot in 2022) for further time and for its demolition work to be done by me for Public safety & to protect my property/life before any disaster since on north west side of lot Ration Shop No. 7 located & eastern side a public Tap by pasuveswarar st localities now ward 20 before 22 (St. No.1) & to stop further action as my property supplied with 2 EB services as below for many decades.

   1) EB No: L – 72/LB-22/Con. No. 0432601822 (Meter No. 04326018221)
   2) EB No: L – 73/LB-23/Con. No.0432601823 (Meter No. 3395437)

2. Above same property allotted to me, a family arrangement (as Codicil) by Grand father K. Thiyagarajan as Karta of our family distributed also his own earning & all assets to all heirs of him including my Father K.T. Jayabalan, was allotted 50% in M/s. K.T. Palanisamy Textiles & UTI mutual funds 500 units and from my deposit amount, I purchased a property in his name at 188 Kalthozhilar Street in Ward 18, Bhavani town. My family Card 12/G/019186 (St. No. 2, Ward 22) at 236, Cauvery Street, for 1998-2003 enclosed.

3. My Grand father expired on 22.02.2001 and death certificate issue Registrar, Bhavani Municipality vide Reg. No. 31/2001/01 Reg. Dt. 27.02.2001 as per his family arrangement (Codicil) on 09.10.2000, the above said property tax was transferred (Tax Assessment : 13332) on 07.09.2001 to my name by order via RF :51/3006/2001/A1 with add as 236, Cauvery Street (Ward 22).

4. Me & my father filed cases against all heirs of deceased in Bhavani Sub-Court OS:193/2002 for Rs.50,000/- in 1993 with interest & also for Permanent Injunction for my lawful possession & peaceful enjoyment and final decree by II ADM Court, Bhavani on 23.03.2004 OS: 475/2004 in my favour still in force as above.

5. My Name and my Father's name included in case by K. Thangammal born as elder sister to my grandfather against all heirs of K. Thiyagarajan for 2/3 share in above property (as she was given adoption) with ourself defendant no.9 & 8 in 2006, Case was dismissed on 2010 in my favour for my title & enjoyment OS 43/1998 in Bhavani Sub Court. Nilavari Thitta Vattachchiyar, Bhavani Tk (Sr. No. 587/09) ordered me with a Patta vide no. 3380 for TS No. 29, Block 16 Ward:C (Old survey no. 847/4 part) for measuring 0.242 ares with FMB in my name for my possession & enjoyment in 2011 classified as Sarkar porempokku & in Survey Dept. of Bhavani Municipality and also by Erode Dt. Collector order as "Ryotwari Plot" patta (TRNo. 2020/0158/10/000-528) in 2022 as all taxes/charges paid by me still date for the above property.

6. In about 2016, My Father Indane Gas Conn. No. 33585/750000012806065 at D.No. 346, Pasuveswarar St. attached/linked to aadhar for LPG subsidy credited to KVB SB A/c 1114172000001266 declaring Gas conn. address as above still his death and even after that and as per Government LPG Control Order, 2000 (TNPDS Portal on 25.12.2022 with Indane DBC facility for Smart Card.

7. My application for Excess Tax Levy submitted via FORM-I for revaluation of my property tax via registered letter RT519750115IN on 16.06.2022. On 06.08.2022, Demand Notice vide GR–2022/SPL/055/011309 under Dist Municipalities Act, 1920 served for increase in Property Tax with Annual Rent Value of Rs.18480/- & Appr. Plot Area as 980 sq.ft.& as not a bonafide one and also to proof my building type, age and structure stability for tax assessment it was not a RCC building abv. 25 yrs. age as in record and I was paying excess Tax since 2003. Hence, I requested him to check its type of building & its age at 236, Cauvery street, (before Ward 22 & now Ward : 19) as in TSLR Extract.

8. The matter was then taken to Dist. Collector via GDP petition. My grandfather also opposed Tax levy boz of building age in 1993 itself, hence property tax from 1993 to 2001 Term I paid only by me to effect Name Transfer Order dt. 07.09.2001. Town Planning Inspector Mrs. Vasantha inspected building on 11.06.2024 and after Inspection; surprisely issued this Demolition Notice on 03.07.2024 with 15 days time. Due to my Health issues, I was not able to abide by the order, also my tiled building falls down in rain and also no usage of Electricity since 04.11.2022 to which 3 phase service L – 73 where my bathroom, latrine, cottage Inds. and well motor were connected. As I was afraid for some new my construction without permission being obtained from municipality and also pestered with the front tiled building to stop waster sewage in rainy days, huge water seepage to EB meter. A Photo EB 043260-18221 (L–72) on 20.09.2024 enclosed with dilapidated madras terrace roof .

9. This Ombudsman aware of the fact that Aadhaar is not proof of Citizenship or domicile under section 9 (Aadhaar Act,), 2016 & not also DOB proof too & from Sept 2016 " Care of" in address column in Aadhar are not verified by UIDAI and also under LPG (Regulations and Distribution order, 2000) under sec 3 "Restriction on unauthorized possession, supply and consumption of liquefied petroleum gas- (1) A person having a connection for liquefied petroleum gas under the public distribution system, shall not – (a) possess more than one connection of liquefie petroleum gas granted under the public diustribution system: and LPG Conn. No. 7200000035890906, the previous Invoice issued before to it speak about is cooking abode of the person also obtained in fraudulent way.

10. In order to stop further action of Bhavani Municipality, I approached Ombudsman for extension of Demolition Notice for a further period before any mishap which might cause danger to life/property & also for public safety on 09.01.2025 with FORM-I submission with Court Fee Rs.10/-.

11. After my complaint on 09.01.2025, Bifurcation of my property tax (055/13332) receipt were issued for only due of Rs.38/- against one receipt is issued for Rs.37/- (Rept. No. 055/01/01/24-25/0024570) with acceptanace as third party KVB, Bhavani Br. Cheque in my name itself an offence & Rs.1/- cash (Rept. No. 055/01/01/24-25/0024571) on Sunday ie 09.02.2025 even after my objection in Writing via email/Whatsapp on the day itself (My Property Tax Rpt. to others is illegal/unlawful & chance of false doc. creation).

12 "Manner of Filing Inquiry & Disposal of Complaints Rules, 2015 (G.O. No 143, Municipal Administration and Water Supply (Election)" under ruling 9. The Commissioner, Bhavani Municipality Lr Na.ka: 887/2022/F1, dated 27.06.2025 (Secretary, TNLB Ombudsman Lr. No. 45/B/2025, dated 16.06.25) was received as I had objected to it as barefaced falsehood and in order to conceal excess Tax Levy & conspirarcy behind my Father Property Assessment Name Transfer in Ward : 18 (TS No. 20, Block: 19 Ward B old sur. no: 820/1 Part still in his name) to Mr. N. Elango, husband of current Chairman, Bhavani Municipality, that why mentioning maliciously wrong name of mine as the Cause of Action from 2022 for Form–I submission & Bhavani Municipality staff were helping to fulfil one's illegal utterior motive & being a public servant not abiding to OS: 475/2004 in II ADM court, Bhavani against all heirs of K. Thiyagarajan decree in favour of me as Permanent Injunction on 23.03.2004 for my lawful possession & peace enjoyment of above property and also Misleading and Misguiding Ombudsman to make wrongful decision under section 10 (3) and purposely issuing Bifurcation receipt 055/13332 for Due Rs.38/- prove their intention & conspiracy along with 2nd respondent on 09.02.2025 (Sunday).

From 1993, my property address was 236 Cauvery Street under Dist. Municipalities Act, 1920 vide Notice 25452 dt. 30.09.1993 & also under TN Urban Local Bodies Act, 1996 (amended 1998 & 2023) under Sec. 186 (1) & 187 (2) Naming of Street & Door Number for a property & against (3) No person shall, without lawful authority, destroy, pull down or deface any such name/number or put up any name/number different from that put up by the municipality.

As few rev. dept. online certificate issue without enquiry also obtained by fraudulent manner that why with add "CAUVERY STREET", I lodged complaint to Erode District Redressal Grievance Committee for its cancellation vide:30574/2025/E1 & also Death Certificate correction cancellation entries (My petition pending in this Ombudsman as 262/N/2025 & also police complaint to SP, Erode on 25.08.2025 for investigation as my father IP admission as IP:23014 in Erode GH, AE ward record remain suspicious and matter was taken upto Chief Registrar, DPH& PM, Chennai on 03.10.2025 for investigation (Patient Identification Number in Form 4 on 29.07.2023) belongs to female of 40 age and decided now to move Madras High Court & also against WP (MD) No. 17814/2024 for my justice as 2 respondent address as w/o Palanisamy, 346 Kauvery St., Bhavani against 2 served summons of RDO, Gobi & summon of DRO, Erode Dt. on 14.3.2024, 07.05.2024 & 19.08.2024 in above WP order.

| EB SERVICE NO. | CONSUMER NO | MAX DEMAND IN WATTS | PERIOD FROM | PERIOD TO | EB METER NO. |
|---|---|---|---|---|---|
| L-72/LB-22 | 0432601822 | NULL/O | 04.11.2022 | 03.11.2023 | 04326018221 |
| L-72/LB-22 | 0432601822 | .01 kwh or 10 watt | 04.11.2023 | 04.11.2025 | 04326018221 |
| L-73/LB-23 | 0432601823 | 0 | 04.11.2022 | 03.09.2024 | 3395437 |

From above table, My EB Meter: 3395437 was "Not in Use" since 04.11.2022 & its Temp DC on 03.09.2024 against my application on 29.07.2024 with payment of Rs.5101/- where amenities with apparatus like Bathroom with water storage tank, Latrine, Ground Well 3 phase I HP Motor, Cottage Industries 3 Phase 2 Motors & Water Connections were connected to EB service L-73/LB-23 (MRT Meter : 3395437 shows its efficient functioning) were not used still/only 10 watt as max demand Electricity continuously 15/30 min. 04.11.2022 still now) for LB-22 proves its occupancy and her Smart Family Card: NPHH-333515798757 prove stay at different place with different name than at 236, Cauvery Street, Bhavani and hiding the truth about her marriage with Mr. Palanisamy, Salem Dt. & their son P. Alagirraja whose living kept secret.

As Commissioner, Bhavani Municipality being a public servant opts illegal/unlawful means, always pads & bats to prove someone's possession as property buildings structures (its age) were unfit for human habitation by his demolition notice itself and no usage of Electricity since 04.11.2022 for basic amenities with its apparatus for LB-23 and Max Demand of 10 watt proves its occupancy of LB-22 and different names with different DOB should be obtained by improper means and hiding marriage with Palanisamy & their son & their living status proves their conspiracy with bifurcation of receipts for only Due of Rs.38/-. Even if they feel any lawful right exists and can be obtained through court of law legally and amicably than by illegal/unlawful means, as Final Decree for Permanent Injunction vide II ADM Court, Bhavani OS:475/2004 ordered 23.03.2004 still in force for my lawful possession and peaceful enjoyment remain unchallenged for 236, Cauvery Street, Bhavani (with 2 EB service) by all heirs of my Grand father boz all heirs of K. Thiyagarajan had got their shares as per his Codicil dt. 09.10.2000 including my father K.T. Jayabalan.

So, I pray to Ombudsman to pass order to stop further action and for extension of Date for its demolition by me for interest of Public safety/my life as its building declared dangerous/unfit for human habitation by notice itself. As Ombudsman main objective is to know truth of the matter for any Judiciary Scrutiny being a Quasi Judicial & not a competent authority to decide possession & pass order against II ADM Court Decree OS: 475/2004 dt. 23.03.2004 in favour of me which still in force." என தெரிவித்துள்ளார்.

15. மனுதாரர் 20.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"எனது வீடு சுமார் 120 வருடங்கள் பழமையானது. 1993ம் ஆண்டு சொத்துவரியினை பவானி நகராட்சி உயர்த்தியுள்ளது. எனது தாத்தாவால் 2001–ம் ஆண்டு வரை சொத்துவரி நகராட்சிக்கு செலுத்தப்படவில்லை. 2001–ம் ஆண்டு முதல் இன்று வரை என்னால் நகராட்சிக்கு வரி செலுத்தப்பட்டு வருகிறது. 2022–ம் ஆண்டு சொத்துவரியினை பவானி நகராட்சி Form-I-ன் மூலம் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தின் ஸ்திரத்தன்மையினை திருமதி. வசந்தா, நகரமைப்பு அலுவலர் 11.06.2024 அன்று ஆய்வு செய்து அதனை இடிப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எனவே மேற்படி பழமை வாய்ந்த கட்டிடத்தினை இடிக்க எனக்கு கால அவகாசம் வழங்கும்படி இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு பணிந்து கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

16. முதலாவது எதிர்மனுதாரரான பவானி நகராட்சி ஆணையரின்கடிதம் ந.க.எண்.887/2024/எப்1, நாள் 19.01.2026–ல் தேர்தல் ஆணையம் மூலம் வாக்காளர் தீவிர சிறப்பு திருத்தப்பணி நடைபெற்று வருவதால் 20.01.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திரு. R. அன்பழகன் என்பவர் நேரில் ஆஜராவார் என தெரிவித்ததைத் தொடர்ந்து நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திரு. R. அன்பழகன் என்பவர் 20.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"நான் ஏற்கனவே 25.09.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் அளித்துள்ள வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு கட்டிடத்தினை ஆய்வு செய்து கட்டிடத்தின் ஸ்திரத்தன்மையினை பொறியாளர் திரு. குமரகுருபரன் (Chartered Engineer) என்பவரால் சான்றிதழ்

வழங்கப்பட்டுள்ளதை இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு பணிந்து சமர்ப்பிக்கிறேன். மேலும் பொதுப்பணித்துறை பொறியாளரை வைத்து மேற்படி கட்டிடத்தை ஆய்வு செய்து விரைவில் பொதுப்பணித்துறை சான்றிதழ் பெற்று அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்கிறேன் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கின்றேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

17. இரண்டாம் எதிர்மனுதாரரான திருமதி ஜெ. காஞ்சனா என்பவர் 20.01.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"நான் பல வருடங்களாக மனுதாரர் வீட்டில் வசித்து வருகின்றேன். நான் வசிக்கும் வீடு மனுதாரர் உடையது என்பதால் மனுதாரர் விரும்பியவாறு அக்கட்டிடத்தினை இடித்துகொள்ள எந்த தடையும் இல்லை எனவும், எனக்கு பரிகாரமாக இழப்பீட்டு தொகை வழங்குவதற்கு ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தினை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

18. மனுதாரரின் மனு, வாக்குமூலங்கள், முதல் எதிர்மனுதாரரான பவானி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலங்கள், இரண்டாம் எதிர்மனுதாரரின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் கேட்டுக்கொண்டுள்ளவாறு, மனுதாரருக்கு சொந்தமான பழைமையான மதராஸ் தார்சு வகை ஓடு போட்ட கட்டிடத்தை பொதுப் பாதுகாப்பு கருதி இடித்து அகற்றிட பவானி நகராட்சிஅறிவிப்பு வழங்கியுள்ளது என்பதும், அவ்வறிவிப்புக்கு மேலும், மேலும் கால அவகாசம் வழங்க மனுதாரர் கேட்டு வருகிறார் என்பதும், நகராட்சி மனுதாரரின் கட்டிடத்தின் மீதான வரி வசூலிப்பு தவறாக கணக்கில் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது என்பதும் மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

மனுதாரரின் வீடு பலமிழந்து உள்ளதால் இடித்து அப்புறப்படுத்த அனுமதி கோரியதைத் தொடர்ந்து, காலஅவசாகத்துடன் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதும், பவானி, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். OS No. 90/2012–ன் 17.03.2014 நாளிட்ட தீர்ப்பில் வாதி தாவா சொத்தின் அனுபவத்திலிருந்து சட்டப்படி அல்லாமல் வாதியை வெளியேற்றக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பித்து தனக்கு சாதகமாக உத்தரவாகியுள்ளது என்பதற்கான ஆவணங்களுடன் வீட்டை இடிக்க கூடாது என புகாருக்குள்ளான வீட்டில் வசித்து வரும் திருமதி காஞ்சனா (மனுதாரரின் தந்தையின் இரண்டாவது மனைவி) என்பவரால் நகராட்சிக்கு கடிதம் அளிக்கப்பட்டுள்ளது என்பதும், இரண்டாவது எதிர்மனுதாரரை வீட்டைவிட்டு காலி செய்யும் நோக்கத்துடன் மனுதாரர் செயல்பட்டு வருகிறார் என்பதும், புகாருக்குள்ளான வீடு ஆய்வு செய்யப்பட்டு, பழுதடைந்த ஒரு பகுதியை அகற்ற அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதும், கட்டிடத்தின் ஸ்திரத்தன்மை நல்ல நிலையில் உள்ளதாக அங்கீகரிக்கப்பட்ட Chartered Engineer & Registered Valuer-ரின் சான்றிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், பொதுப்பணித்துறை பொறியாளரை கொண்டு ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்பதும், திருமதி. காஞ்சனா என்பவரால் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதால் நகராட்சியால் தலையிட இயலவில்லை என்பதும், முதல் எதிர்மனுதாரரான பவானி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் பவானி நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலங்களிலிருந்து அறியமுடிகிறது.

மனுதாரரின் தந்தையின் இரண்டாவது மனைவியான இரண்டாம் எதிர்மனுதாரர் 25 ஆண்டுகாலமாக மேற்படி வீட்டில் வசித்து வருகிறார் என்பதும், வீட்டு கட்டுமானம் நல்ல நிலையில் உள்ளதால், இடிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதும், மனுதாரரின் வீடு என்பதால் மனுதாரர் விரும்பியவாறு இடித்துகொள்ள தடையேதும் இல்லை எனவும், பரிகாரமாக இழப்பீட்டு தொகை வழங்க கோரியுள்ளார் என்பதும் இரண்டாவது எதிர்மனுதாரரின் வாக்குமூலங்களிலிருந்து அறியமுடிகிறது.

இந்நேர்வில், மனுதாரரால் புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள கட்டிடம் அங்கீகரிக்கப்பட்ட Chartered Engineer & Registered Valuer இடமிருந்து பெறப்பட்ட சான்றிதழின்படி ஸ்திரத்தன்மையோடு நல்ல நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால், இது குறித்து பொதுப்பணித்துறை பொறியாளர் கொண்டு

ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்தை ஏற்று, வழக்கு எண். O.S. No. 90/2012–ல் 17.03.2014 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பினை கருத்திற் கொண்டு, நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்தின்படி செயல்பட பவானி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 10-ம் நாள் என்னால கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. ஜெ. சண்முகசுந்தரம்,
236, காவேரி வீதி, புதிய வார்டு 19,
பவானி 638301,
ஈரோடு மாவட்டம்.

2. திருமதி. காஞ்சனா, க/பெ. லேட் திரு. ஜெயபாலன்,
எண்.236, காவேரி வீதி, புதிய வார்டு 19,
பவானி 638301,
ஈரோடு மாவட்டம்.

3. நகராட்சி ஆணையர்,
பவானி நகராட்சி,
ஈரோடு மாவட்டம்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

5. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இகோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.